**இரத்தினபுரி மாநகர சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 11 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இரத்தினபுரி மாநகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக சபைக்கு அறவிடவேண்டிய முத்திரைக் கட்டண அனுப்புதல்கள் கிடைக்கும் போது சபையினால் அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 860,113 தொகை குறைக்கப்பட்டிருந்த, போதிலும், அது உரிய கடன்கொடுத்தோரிலும் நிலுவை வருமானத்திலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய சினிமா மண்டபங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை மீதி ரூபா 551,000 ஆக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையின் கணிப்பீட்டின் பிரகாரம் அது ரூபா 697,500 ஆனமையால் கடன்பட்டோர் ரூபா 146,500 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக நிலுவைக் கட்டணத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட தண்டப் பணமான ரூபா 1,081,125 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குச் செலுத்த வேண்டிய வரித் தொகை ரூபா 95,081 ஆக இருந்த போதும், அது ரூபா 228,375 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக பொறுப்புக்கள் ரூபா 133,294 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்குரிய ரூபா 123,148 கூட்டுத்தொகையான முத்திரை வரி 2017 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அது நடைமுறைப் பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) பேருந்து நிலையம் மற்றும் சந்தைத் தொகுதி நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடனின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 54,566,853 கடன் தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 2006 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 29/06/24 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சபைக்கு கிடைக்க வேண்டிய வருந்தினர் விடுதி வாடகையிலிருந்து 50 சதவீதம் 2004 யூலை முதல் ஈடுசெய்யப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அதற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வெறலுப வீதி அபிவிருத்திக்கான கடன் பணம் தொடர்பாக உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிலுவை வட்டி ரூபா 11,390,805 ஆக இருந்த போதிலும், அப்பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது நானாவித செலவின விடயங்களிலும், களஞ்சிய முற்பணத்தின் கீழும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 962,925

தொகையான நிலையான சொத்துக்கள், மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் ஊடாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டில் கடன்கொடுத்தோருக்காக ரூபா 3,593,295 தொகை குறைவாக ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மதிப்பிழந்த காசோலைப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் மதிபிழந்த காசோலைப் பெறுமதி ரூபா 1,029,487 ஆகவும் அதற்கான பெறுவனவுகள் ரூபா 897,222 ஆகவும் இருந்த போதிலும், மதிப்பிழந்த காசோலைக் கணக்கில் அது முறையே ரூபா 795,393 மற்றும் ரூபா 697,362 ஆகப் பதியப்பட்டிருந்தது.

(ஒ) வருமானத் தலைப்பு 07 இற்குரிய 2017 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 622,478 கூட்டுத்தொகையான வருமானம் மீளாய்வாண்டின் நிலுவை வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய 04 நடைமுறைக் கணக்குகளினதும் 02 சேமிப்புக் கணக்குகளினதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பொழிப்பு காசேட்டின் படியான மீதிக்கும் இடையே ரூபா 6,661,260 கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 43 கணக்கு விடயங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே கூட்டுமொத்தமாக ரூபா 118,116,962 வேறுபாடு காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 561,986 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 2,868,074 ஆனமையால் ரூபா 2,306,088 இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் விருந்தினர் விடுதி வாடகை நிலுவை வருமானம் ரூபா 10,532,114 ஆக நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும்,

உரிய உறுதிப்படுத்தல் பதிவேட்டின் பிரகாரம் நிலுவை வருமானம் ரூபா 10,437,572 ஆனமையால் ரூபா 94,542 இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு காணப்பட்டது.

(உ) பெறுமதிசேர் வரி பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்குரியதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய பெறுமதிசேர் வரித் தொகை ரூபா 2,799,077 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 3,655,618 ஆனமையால் ரூபா 856,541 இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபை பகுதி செயற்திட்டக் கடன் தொகை ரூபா 1,559,433 மற்றும் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியக் கடன் (உழவு இயந்திரம்) கடன் தொகை ரூபா 600,254 என்பவற்றுக்கான மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 5,090,349 கூட்டுத்தொகையான 03 கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

---

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 571 | 1997 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 37,485,459 கூட்டுத்தொகையான 06 வைப்புக்கள் தொடர்பாக 2017 ஆகஸ்ட் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 1645 | சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் | |
| (i) 4.2 மற்றும் 4.3 ஆம் பிரிவுகள் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வீடுகளை வழங்கும் போது தெரிவு செய்யும் கருதுகோள்களுக்கு இணங்காதிருந்ததுடன் தெரிவு செய்வதற்காக கவனத்தில் கொள்ளகூடிய சகல விடயங்களும் வெளிப்படுத்தக்கூடிய பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரி விண்ணப்பத்திரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 5.7 ஆம் பிரிவு | உத்தியோகத்தருக்கு தமது பதவிக்குரிய இல்லத்தில் குடியிருப்பதை ஏற்றுக்கொள்ளாதிருக்கும் போது அந்த உத்தியோகத்தருக்குப் பதிலாக வேறொரு உத்தியோகத்தர் குடியிருப்பாராயின் வீட்டினை ஒதுக்கீடு செய்யும் அதிகாரத்தரப்பினர் அங்கீகரிக்காதிருந்த போதும் வீட்டினை மறுத்த உத்தியோகத்தர் அதில் குடியிருப்பதாகக் கருதி அவரிடமிருந்து வாடகை அறவிடவேண்டியிருந்த போதிலும், 02 உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) 2009 மார்ச் 09 ஆந் திகதிய 2009/01 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 1.5 ஆம் பந்தி | 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இரத்தினபுரி பொதுச் சந்தையின் கடைகளுக்காக 19 வருடங்கள் முதல் வாடகை திருத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1.10 ஆம் பந்தி | சபையினால் நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்பட்ட இரத்தினபுரி பொதுச் சந்தையின் 03 கடைகள் ஆரம்ப வாடகையாளரினால் பெயர் குறிப்பிடப்பட்ட வேறு நபர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்காக கேள்விகோரல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 71,376,984 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 46,579,450 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 24,797,534 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 24,797,534 இனால் அதிகரித்தமை தொடர்பில் 03 விடயங்களின் வருமானம் ரூபா 23,627,947 இனால் அதிகரித்தமை மற்றும் 02 செலவின விடயங்கள் ரூபா 5,658,473 இனால் குறைவடைந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 36,500 | 34,424 | 29,505 |
| வாடகை | 62,996 | 54,059 | 24,410 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 6,092 | 1,845 | - |
| ஏனைய வருமானம் | 380,018 | 354,498 | 48,645 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் மற்றும் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட முறையே 23 சதவீதம், 70 சதவீதம், 82 சதவீதம் மற்றும் 42 சதவீதம் என்ற சதவீதங்களால் குறைவடைந்திருந்தன.

### 2.3.3 ஆதனவரி

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 29,504,918 ஆக இருந்ததுடன் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான சபையின் செயற்படு நிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

### 2.3.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 06 உத்தியோகபூர்வ விடுதிகளிலிருந்து ரூபா 54,072 கூட்டுத்தொகையான நிலுவை விடுதி வாடகை கிடைக்க வேண்டியதாக இருந்தது.

(ஆ) கடை வாடகைப் பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரத்தினபுரி பொதுச் சந்தையின் 57 கடைகளிலிருந்து 06 மாதங்கள் முதல் 33 மாதங்கள் வரையிலான காலப்பகுதிக்காக கிடைக்க வேண்டிய ரூபா 2,899,420 கூட்டுத்தொகையான நிலுவை வாடகை 2017 ஏப்ரல் வரையிலும் கிடைக்கப்பெறாது இருந்ததுடன் நிலுவை வாடகையை அறவிடுவதற்காக நினைவூட்டற் கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும் வாடகை உடன்படிக்கையின் 4 ஆவது நிபந்தனையின் பிரகாரம் அதிலுள்ளவர்கள் தொடர்பாக ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குடுகல்வத்த சந்தைத் தொகுதியின் 07 கடைகளுக்குரிய ரூபா 1,759,525 கூட்டுத்தொகையான நிலுவை கடைவாடகை மீதி காணப்பட்டதுடன் 2017 யூலை வரையிலும் அதில் ரூபா

291,930 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மேலும் சந்தைத் தொகுதியின் மேல் மாடியில் 03 கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் வாடகை உடன்படிக்கையின் 7.2 ஆம் நிபந்தனைக்கு முரணான 03 கடைகள் பொருட் களஞ்சியமாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) இரத்தினபுரி பொதுச் சந்தையின் 02 கடைகளுக்குரிய பழைய வாடகையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 626,535 தொகையான நிலுவைக் கடை வாடகையை 2017 ஆகஸ்ட் வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம் சபை நிதியத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு ரூபா 86,600,000 கூட்டுப்பெறுமதயான 15 வேலைகள் முன்மொழியப்பட்டிருந்த போதும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் எந்த ஒரு வேலையும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் பாதிடப்பட்ட வேலையின் கீழ் உள்ளடங்காத 13 வேலைகள் சபை நிதியத்திலிருந்து ரூபா 11,672,684 தொகை செலவில் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 மார்ச் 02 ஆந் திகதி முதல் 04 ஆந் திகதி வரை மலேசியாவில் நடைபெற்ற மாநாட்டிற்காக முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II ஆம் தரத்தின் உத்தியோகத்தவர் ஒருவர் பங்குபற்றியமைக்காக 2007 செப்தெம்பர் 11 ஆந் திகதிய 21/2007 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்க வெளிநாட்டுப் பிரயாணங்களுக்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரினால் விநியோகிக்கப்பட்ட 05 உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட செயற்பாட்டு

செயற்திறனின்மை தொடர்பாக உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| உள்ளகக் கணக்காய்வு ஐயவினாவுடனான தொடர்பு | அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் |
|---|---|
| (i) RMC/அவினி/007 | உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருப்பவர்களினால் தனிப்பட்ட செலவினத்தில் உத்தியோகபூர்வ இல்லங்களை புனரமைத்தல் தொடர்பான எதிர்கால பரிசோதனைகள் மேற்கொள்ளாமை. |
| (ii) RMC/அவினி/008 | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 247(அ) இன் (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் வியாபார நிலையங்களின் வருடாந்த வருமானத்தில் 01 சதவீதத் தொகையொன்று அனுமதிப்பத்திரக் கட்டணமாக அறவிடப்படாமை. |
| (iii) RMC/அவினி/008 | வாடகை வாகனம் நிறுத்தப்பட்டதால் நிலுவை வருமானம் அறவிடப்படப்படாமை. |
| (iv) RMC/அவினி/018 | இரத்தினபுரி ஆலய வீதி, உலக வர்த்தக நிலையம் அமைந்துள்ள இடம் முறையற்ற வகையில் வாடகை செலுத்தும் வாடகையாளரினால் அனுமதியற்ற வகையில் மூன்றுமாடி கட்டிடமொன்றை நிர்மாணித்தல் தொடர்பாக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை |
| (v) RMC/அவினி/028 | புளுங்குபிட்டிய பெல்பொலவத்த பெயருடைய காணி மற்றும் புளுங்குபிட்டிய பொது மலசலகூடம் என்பவற்றை முறையற்ற வகையில் வாடகைக்கு வழங்குதல் மற்றும் அனுமதியற்ற கட்டிட நிர்மாணங்கள் தொடர்பாக மாநகர கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |

(இ) இரத்தினபுரி நகரத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான சினிமா திரையரங்கு 2001 மே 01 ஆந் திகதி முதல் 2006 ஏப்ரல் வரை

செல்லுபடியாகும் வகையில் உடன்படிக்கை செய்யப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2006 மே முதல் உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமல் 2010 ஏப்ரல் 21 ஆந் திகதி வரை வாடகையாளரினால் சினிமா திரையரங்கு நடாத்தப்பட்டிருந்ததுடன் 2010 சனவரி 31 இல் உள்ளவாறு வாடகையாளரிடமிருந்து அறவிடவேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூபா 1,953,000 ஆகும். மேலும் இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் உரிய கோவை 2010 செப்தெம்பர் 02 ஆந் திகதி சட்டத்தரணியொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 மார்ச் வரையிலும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நிலுவைப் பணம் சபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் சபையினால் 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 04 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 2,822,902 செலவில் களுகங்கை முடிவில் நிர்மாணிக்கப்பட்ட நகரப் பூங்கா காடுவளர்ந்து அழிவடைந்திருந்தமையால் உரியவாறு பராமரித்து பிரதேசத்தின் மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு செயற்படுமாறு மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரினால் 2010 செப்தெம்பர் 21 ஆந் திகதி இரத்தினபுரி மாநகர சபையின் நகர பிதாவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் உரிய நகரப் பூங்கா ஆக்கபூர்வமானதாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றும் பொறுப்புவாய்ந்த தரப்பினரால் புறக்கணிக்கப்பட்டிருந்தது. மேலும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நகர பூங்காவின் பாதுகாப்பிற்காக இணைக்கப்பட்டிருந்த பிரதான நுழைவாயிலின் பூட்டு கழன்று முழுமையாகத் திறக்கப்பட்டிருந்தது.

(ii) நகர பூங்காவைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்ட பச்சை நிறமுடைய வலை மேவுகை ஒரு இடத்தில் கழன்று உடைந்திருந்ததுடன் வீதிக்கு முன்பாக

இருந்த பகுதியில் 02 இடங்களில் வலை மேவுகை உடைந்திருந்தமையால் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது.

(iii) நகர பூங்காவில் நகரத்தின் யாசகர்களினால் தற்காலிக தங்குமிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(iv) 2010 ஆம் ஆண்டின் போது நகர பூங்காவாக நிர்மாணிக்கும் போது இந்த இடத்தில் விளையாட்டு உபகரணங்கள், கொங்கிரீட் வாங்குகள் போன்றவற்றை பொருத்துவதற்கு செலவிடப்பட்டிருந்த போதிலும் விளையாட்டு மைதானத்திற்குள் எந்தவொரு விளையாட்டு உபகரணமும் காணப்படவில்லை.

(v) நகர பூங்கா வளவில் போடப்பட்டிருந்த கற்கள் எதுவும் அவதானிக்கப்படாதிருந்ததுடன் நிலம் முழுவதும் காடு வளர்ந்திருந்தது.

(ஆ) இரத்தினபுரி பொதுச் சந்தையை வாடகைக்குப் பெற்றிருந்த கடை உரிமையாளர்களுடன் கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கைக்கு முரணாக நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக சபையின் செயற்படுநிலை நல்லநிலையில் காணப்படவில்லை.

(இ) குடுகல்வத்த சந்தைத் தொகுதியின் மேல்மாடியின் படிக்கட்டுக்கு அருகாமையில் உள்ள இரண்டு இடங்களில் வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்காக வெளிநபர்கள் இருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கையின் அடிப்படையில் நிதியைக் கூட்டிணைத்தல் நடவடிக்கைகள் மற்றும் சட்டம் தொடர்பான நிலையியற் செயற்குழுவின் சிபாரிசு செய்யப்பட்ட நிபந்தனைகளின் கீழ் வாடகைக்கு வழங்குவதற்காக 2015 மே 08 ஆந் திகதிய 6:5 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 02 கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நகரப் பொறியியலாளரினால் 2015 யூலை 30 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஏனைய நடவடிக்கைகளைச் செய்வதற்கு விடய எழுதுவினைஞருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2017 ஏப்ரல் வரையிலும் உரிய விடய எழுதுவினைஞர் அதன் படி நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் சபைக்கு எவ்வித வாடகையும் செலுத்தாமல் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக ஒரு கடையில் வியாபாரம் நடாத்தப்பட்டிருந்தமையும் வெளித்தரப்பினருக்கு வாடகை செலுத்தப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) மாநகர சபையினால் மீளாய்வாண்டின் போது நேர் ஊழிய அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக களஞ்சியத்திலிருந்து நிர்மாணப் பொருட்களை விநியோகிக்கும் போது தேவையினை விட கூடுதலாக விநியோகித்தமையின் காரணமாக ரூபா 86,580 கூட்டுமொத்தமாக நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(உ) ஆதனவரி அறவிடலுக்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் சகல அசையாத ஆதனங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், 1997 ஆம் ஆண்டின் ஆதனவரி மதிப்பீட்டின் பிரகாரம் ஆதனவரி அறவிடப்படுகின்றமையும், 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டை அமுல்படுத்தும் இரண்டு சந்தர்ப்பங்களின் போது பொதுச் சபை மற்றும் நிதிச் செயற்குழுவினால் தாமதப்படுத்தப்பட்டிருந்தமையும், 2013 யூலை 30 ஆந் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தின் போது புதிய மதிப்பீடொன்றைச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

அதன் பிரகாரம் புதிய மதிப்பீட்டிற்காக 2014 ஏப்ரல் மாதத்தின் போது மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவித்திருந்ததுடன், திணைக்களத்தால் 2017 மார்ச் மாதத்தின் போது தேவையான தகவல்கள் சபையிடம் கோரப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை வரையிலும் உரிய தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு சபை தவறியிருந்தது. ஆதனவரி திருத்த நடவடிக்கைகளுக்காக தேவையான தகவல்களை வழங்குவதற்கு தாமதித்தமையின் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததாக மாகாண மதிப்பீட்டாளர் 2017 யூலை 12 ஆந் திகதி நகர ஆணையாளருக்கு அறிவித்திருந்தார்.

## 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாநகர சபையின் முன்னாள் வருமானப் பரிசோதகருக்கு உத்தியோகபூர்வ வீடொன்று வழங்கப்பட்டிருக்கும் போது அந்த உத்தியோகபூர்வ இல்லத்தின் எல்லையிலுள்ள 17.43 பேர்ச் நிலப்பகுதி மற்றும் அதில் அமைந்துள்ள சகல ஆதனங்களையும் பதிவிற்கான நிலக் குத்தகைத் திட்டத்தின் கீழ் 1999 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் இந்தக் காணியின் பகுதியில் நிரந்தர வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததாக 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது ரூபா 314,181 செலவில்

அந்தக் காணிக்கு உட்செல்வதற்காக 240 அடி நீளமான வீதியொன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்த வீதியைப் பயன்படுத்துவதால் வேறு ஏதேனும் நலனொன்று காணப்படாதிருந்ததுடன் சபை நிதியம் ஆகக்கூடிய வினைத்திறன் உடையதாக பயன்படுத்தப்படாமல் தனி நபரொருவருக்கு சாதகமான முறையில் செலவிடப்பட்டிருந்தது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

சபையின் கேள்வி அறிவித்தலொன்று 03 செயற்திப் பத்திரிகைகளில் அச்சிடுவதற்காக 2016 யூன் மாதத்தில் ரூபா 69,345 செலுத்தப்பட்டிருந்தும் முறையானதும் சாதாரணமானதுமான காரணமின்றி அந்த அறிவித்தலை இரத்துச் செய்யும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டமைக்காக 2016 செப்டம்பரில் ரூபா 20,868 தொகை செலுத்தப்பட்டமையின் காரணமாக சபை நிதியத்திற்கு ரூபா 90,213 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 3.6 ஒப்பந்த நிர்வாகம்

உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 5,598,069 பெறுமதியான இரத்தினபுரி நகர மண்டபத்தின் முதலாவது மாடியை அபிவிருத்தி செய்யும் வேலைக்குரிய (டைல் பதித்தல், வளிப்பதனாக்குதல் மற்றும் மலசலகூட புனரமைத்தல்) கேள்வி கோருதல் 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2017 ஆகஸ்ட் வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த இந்த வேலை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 பெப்ரவரி 02 ஆந் திகதிய கேள்வி ஏற்றுக்கொள்ளல் கடிதத்தின் பிரகாரம் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதியாக 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை கையொப்பமிடல் 2016 யூலை 04 ஆந் திகதி வரை தாமதப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஒப்பந்தகாரருக்கு நகர மண்டபத்தை ஒதுக்குதல் 2016 மே 01 ஆந் திகதி வரையிலும் தாமதப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது வரையில் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி 02 ½ மாதம் தாமதமாகியிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 25 ஆந் திகதி வரை வேலையின் திகதி நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதியளவில் நகர மண்டபத்தின் வளிப்பதனாக்கி

இயந்திரம் பொருத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 3,718,220 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் வளிப்பதனாக்கி இயந்திரத்தை செயற்படு நிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான ஏனைய நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் வரையிலும் அந்த இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

சபைக்குரிய கணாதொல கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உக்காத கழிவுப்பொருட்களில் விற்பனை செய்யக்கூடிய பிளாஸ்டிக் போத்தல், பொலித்தீன் மற்றும் தேங்காய் சிரட்டைகள் போன்றவற்றை அகற்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பொருட்கள் திறந்த வெளியில் குவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நகரத்தின் பொதுச்சந்தை மற்றும் ஹோட்டல்களிலிருந்து அகற்றப்படுகின்ற மரக்கறிக் கழிவுகளைப் பயன்படுத்தி கூட்டுப்பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதிலும், வீடுகளிலிருந்து சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் எவ்வித வேறுபடுத்தலுமின்றி அந்த இடத்தில் அமைந்துள்ள சரிவுகூடிய திறந்த நிலத்தில் அகற்றப்பட்டிருந்தது. இந்த நிலைமை சுற்றாடல் மற்றும் சமூகரீதியில் பாரிய பிரச்சினையான நிலையைத் தோற்றுவிக்கக் கூடியதாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) கழிவுப் பொருள் தளத்திற்கு அருகில் மிகவும் முறையற்ற வகையில் கண்ணாடி போத்தல், மின்சார உபகரணங்கள், கணனி துணைப்பாகங்கள் போன்ற உக்காத கழிவுப்பொருட்கள் குவிக்கப்பட்டிருந்ததுடன் அதனுள் நீர் தேங்கிநின்று நுளம்புகள் பெருகும் ஆபத்துக் காணப்பட்டது.

(ஈ) கழிவுப்பொருட்களை மீள் சுழற்சி செய்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையிலிருந்து 2016 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த 03 இயந்திர உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்த செயற்திட்டத்திற்குரிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் கழிவுப்பொருள் மீள்சுழற்சி செய்யும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 51 செலவின விடயங்களில் ரூபா 41,100,000 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 23 செலவின விடயங்களில் ரூபா 31,670,100 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாட்டில் 83 சதவீதம் முதல் 99.8 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது.

### 4.2 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாதுள்ள கணக்காய்வு ஐயவினாக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணிப்பீடு செய்யக்கூடிய ரூபா 73,096,371 பெறுமதியான 31 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரத்தினபுரி மாநகர சபையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பின்வரும் அவதானிப்புக்கள் தொடர்பாக 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

| | கணக்காய்வு அறிக்கையுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (i) | 2.2.4 | இரத்தினபுரி விருந்தினர் விடுதிக்காக 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்காமை |
| (ii) | 4.1(இ) | தீயணைப்புப் பிரிவிற்குரியதாக போதியளவான பௌதீக மற்றும் மனித வளங்கள் காணப்படாமை. |

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | கணக்குகளிலிருந்து கைவிடல் |
| | (ii) | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் இனங்காணப்படாமை |
| | (iii) | நிதிக்கூற்றுக்கள் பட்டோலைகளுடன் இணங்காமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) சொத்துக் கட்டுப்பாடு | | மாநகர சபைக்குரிய காணிகளில் அனுமதியற்ற நிர்மாணங்கள் காணப்பட்டமை |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | | நிர்மாணங்களில் நீண்ட தாமதம் காணப்பட்டமை. |
| (உ) பாதீட்டுக் கட்டுப்பாடு | | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |